புதிய யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே வருகின்ற தண்ணீரை வீணாக்காமல் புதிய முயற்சியாக ஏதாவதுபாசனத்தை மேம்படுத்த முடியுமா என்ற பிரச்சினையை இங்கே வைத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு சாத்தியம் இருப்பின் நிச்சயமாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 156. செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

156—

புவனகிரித் தொகுதிக்கு நெய்வேலி சுரங்க நீர்.

*306—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெய்வேலி 2-வது சுரங்கத்தின் உபரி நீரை புவனகிரி தொகுதி மக்களுக்காக குடிநீராகவும், பாசன நீராகவும் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தினுடைய உபரி நீர் ஏற்கெனவே பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) 1987-ஆம் ஆண்டு ஜூலை முதல் விருத்தாச்சலம் மற்றும் சிதம்பரம் வட்டங்களில் உள்ள ஏரிகள் மூலம் 6,590 ஏக்கர்கள் பாசன வசதி பெற்று வருகிறது.

ஆகவே புதிதாக வேறு திட்டங்கள் செய்வதற்குரிய சாத்தியக் கூறுகள் இல்லை.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கி வரும் கங்கைபோல் வற்றாமல் நீரை வெளியேற்றிக்கொண்டிருக்கிறோம். நெய்வேலி சுரங்கப் பகுதிகளில் உள்ள பல்வேறு ஊர்களுக்கு குடிநீராக பயன்படுத்தப்படலாம். வறட்சியில் வாடும் புவனகிரிப் பகுதிக்கு வராததால் அதை அந்த பகுதிக்குத் திருப்பிவிடும் முயற்சி குறித்து நம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு மறு ஆய்வு செய்யுமா ?

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மூன்றாவது சுரங்கம் வெட்டுகின்ற பணி வருகின்ற நேரத்தில், ஏற்கனவே அந்தக் கால்வாயிலே விழுகின்ற தண்ணீரை, அந்தக் கால்வாய் பகுதியிலே அந்தச் சுரங்கம் வருகின்ற காரணத்தினாலே, சுரங்க அதிகாரிகள் எல்லாம் இன்றைக்கு அந்தத் திட்டத்திற்கு சாத்தியக் கூறுகள் இல்லையென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, ஏற்கெனவே சேத்தியாதோப்பு அணைக்கட்டு மற்றும் பல பகுதிகளுக்கு இந்த உபரி நீர் செல்கின்ற காரணத்தினால் ஏற்கனவே இருக்கின்ற பாசனப் பகுதிகளை நாம் நடைமுறைக்கு இன்றைக்கு வைத்துக் கொண்டால் போதும் என்கின்ற நிலை இருக்கிறது. மூன்றாவது சுரங்கம் வருகின்ற நேரத்தில் இந்தக் கால் வாயினுடைய கொள்ளளவும் பாதிக்கப்படுகின்ற அளவுக்கு வருகிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே புதிதாக இந்தக் கால்வாயை விரிவுபடுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 157. திரு. இரா. நடேசன். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

157—

திருவட்டாறில் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு.

*434 திரு. இரா. நடேசன் :
மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, கிராம குடிநீர்த் திட்டங்களில் பொது விநியோக இணைப்புகளுக்கு வழங்கியதுபோக, எஞ்சிய குடிநீரை வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசின் தற்போதைய கொள்கையின்படி கிராமக் குடிநீர்த் திட்டங்களிலிருந்து வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.